# தமிழ் இலக்கிய இலக்கணங்களில் கலைகளும் கலைக்கோட்பாடுகளும்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை - 2025

தொகுதி - 2




பதிப்பாசிரியர்கள்

ஆய்வாளர் ச.வாசுதேவன்

முனைவர் வெ.பிரதீப் குமார்

கலாநிதி ஜயந்தினி விக்னராஜன்

திருமதி வெண்ணிலா

கலைகள் அன்று முதல் இன்று வரை தன்னுடைய வடிவங்களிலிருவ்து வட்டாரங்களுக்கேற்ப மாறுபடுகின்றனவே தவிர அக்கலையின் தன்மையும் சாராம்சமும் மாறுபடுவதில்லை. இறை வணக்கம் தொடங்கி மங்களம் பாடுதல் வரை ஒரே முறையினைக் கொண்டதாகவும் ஆடல், பாடல், இசையமைப்பு முறைகள், அடவுகள், கதையோட்டம் ஆகியவற்றில் சிறு சிறு மாற்றங்கள் வட்டாரங்களுக்கு உள்ளாகவே நிகழ்வதைக் காணமுடிகின்றது. பதிப்பித்து வெளியிடுவதில் களரி கலை இலக்கியக் களம் பெருமகிழ்வு கொள்கிறது.

திரு. **சு.வாசுதேவன்**
முதன்மைப் பதிப்பாசிரியர்
நிறுவுநர், களரி கலை இலக்கியக் களம்
குடியநல்லூர், கள்ளக்குறிச்சி



ISBN : 978-81-910199-8-8

இடையன் இடைச்சி பதிப்பகம்
சில்லாங்காட்டுப்புத்தூர் - அரச்சலூர்
ஈரோடு

9 788191 019988
Rs.400/-

# பொருளடக்கம்


1. **சோழர் கால இலக்கியங்களில் சமையற்கலை**
   முனைவர் ந.செல்லம்..........................................08
2. **தஞ்சைப் பெருவுடையார் உலா கூறும் இறைவன் பெருமை**
   கலாநிதி ஜயந்தினி விக்னராஜன்...............................13
3. **சோழர் கால இலக்கியம் - மூவருலாவும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரும்**
   எஸ்.வி.ஆர்.மூர்த்தி..........................................21
4. **சோழர்கால இலக்கியத்தில் கலைகளும் பண்பாடும்**
   சுந்தரமதி வேதநாயகம்.........................................36
5. **பள்ளு இலக்கியங்களில் வாழ்வியல்**
   ப.தேன்மொழி...................................................43
6. **தமிழிலக்கியங்களில் சிற்றிலக்கியக் கலைக் கூறுகள்**
   முனைவர் ரா.ராஜா..............................................49
7. **குறத்திப்பாடலில் உளவியல் வெளிப்பாட்டுக் கூறுகள்**
   கி.இரா.சிந்து...................................................54
8. **சித்தர்கள் வளர்த்த மருத்துவக் கலை**
   ஜெ.சேக்கிழார்..................................................59
9. **சு.தமிழ்ச்செல்வி நாவல்களில் தொழில் கலை நுணுக்கங்கள்**
   த.கோமதி.......................................................71
10. **சஞ்சாரம் நாவலில் இசை பற்றிய குறிப்புகள்**
    நா.மகாலெட்சுமி...............................................80
11. **பழந்தமிழ் இலக்கியங்களில் வானியல் கலை**
    திருக்குமார் சுரேஸ்............................................85
12. **தமிழ் இலக்கியங்களில் இசைக்கருவிகள்**
    முனைவர் பா.ராஜன்..........................................93
13. **தமிழர் கட்டடக்கலைக் கோட்பாடுகள்**
    முனைவர் மா.கிருஷ்ணவேணி................................101

# தமிழிலக்கியங்களில் சிற்றிலக்கியக் கலைக் கூறுகள்

முனைவர் ரா.ராஜா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600117
9080348727
rokithraja1984@gmail.com

**முன்னுரை**

தமிழ் மொழியில் அமைந்த இலக்கிய செல்வங்களுள் ஒன்றாக திகழ்வது தான் சிற்றிலக்கியங்கள். இதன் வித்தும் வளர்ச்சியும் சங்க இலக்கியத்தில் உள்ளது. ஆற்றுப்படை ஒரு துறையாகவும், தனிப்பெரும் பாடல்களாகவும் அன்றே வளர்ச்சி பெற்றன.தொல்காப்பியம், பாட்டு தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியம், பக்தி பாடல்கள், இசை நாடக இலக்கியங்கள் இதற்கு சான்றாகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் இவை சிற்றிலக்கியம் எனவும் விளக்கம் கொடுப்பர். வடமொழியில் பிரபந்தம் என்று அழைக்கப்படுவதை நாம் சிற்றிலக்கியங்களாகக் கொள்கின்றோம். அத்தகைய சிற்றிலக்கியமானது தமிழிலக்கியங்களில் காலந்தோறும் பெற்றுவந்துள்ள கலை இலக்கிய சிந்தனையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்கு தொல்காப்பியம் ஓர் அடித்தளம்**

சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்குரிய தொன்மை வரலாற்றை அறிவதற்குத் தொல்காப்பியம் அடித்தளமாக அமைகின்றது. காலந்தோறும் மக்களின் தேவைக்கேற்ப, கவிஞரின் கற்பனைக்கேற்ப இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே வருகின்றன. இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் தொல்காப்பியர் புதியனவாக எழும் இலக்கிய வகைகளைப் போற்ற வேண்டும் என்ற நிலையில் “விருந்து” என்னும் வனப்பினைப் படைத்துள்ளார்.

> **“விருந்தே தானும்**
> **புதுவதுகிளந்த யாப்பின் மேற்றே”1**

மணிமேகலையில் உதயகுமாரன் மதயானையை அடக்குதல் முதலிய இலக்கியக் கூறுகள் வாதோரண மஞ்சரி என்ற இலக்கிய வகையின் உருவாக்கத்திற்கு வித்தாகத் திகழ்கின்றன. காப்பியங்களில் கூறப்படும் கனவுப் பொருண்மைச் செய்திகள் யாவும் அனுராக மாலை என்னும் இலக்கிய வகை உருவாக்கத்தோடு தொடர்புடையனவாகத் திகழ்கின்றன. "காப்பியத் தலைவனையும், தலைவியையும் புகழும் புகழ்ச்சிப் பொருண்மைப் பகுதிகள் யாவும் நாமமாலை, புகழ்ச்சிமாலை என்னும் இலக்கிய வகைகளை உருவாக்கின"[5] என்று ந.வீ.செயராமன் அவர்கள் சான்றுகளுடன் விளக்கிக்காட்டியுள்ளார். மேற்கூறப்பெற்ற கருத்துக்கள், தமிழ்க் காப்பியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள் நிறைந்து விளங்குகின்றன என்பதைப் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

சிற்றிலக்கியங்கள் மூலம் ஓரளவு தமிழ்ப் பண்பாட்டினையும் தமிழக வரலாற்றையும் அறிய முடிகின்றது. கற்பனை ஆற்றலைப் பெருக்குவதில் சிற்றிலக்கியங்கள் பேருதவியாக அமைகின்றன.அளவில் சிறியதாயினும் பெரும் சுவையைத் தருவனவாக சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களின் மூலம் அக்கால மக்களின் சமூக வாழ்வியலை நம்மால் அறியமுடிகின்றது. தெய்வங்கள் மீது அமைந்துள்ள சிற்றிலக்கியங்கள் மூலம் ஊர், வரலாறு, புராணக்கதைகள், மக்களின் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை நாம் அறிந்துகொள்ள முடிகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

**அடிக்குறிப்புகள்**

1.தொல்., செய்., 239
2.தொல்.பொருள்.புறத்திணையியல்-82
3.தொல்.பொருள்.புறத்திணையியல்-83
4.தொல்.பொருள்.புறத்திணையியல்-36
5.ந. வீ. செயராமன், பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப.19